(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 3(4).] **பாராளுமன்றம்**

## 3 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2021 பெப்ரவரி 25 வியாழக்கிழமை வெளியிடப்பட்டது

## 2021 மார்ச் 09, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

44/2020

கௌரவ ஹேஷா விதானகே,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கமத்தொழில் அமைச்சின் கீழ் ஹதபிம அதிகாரசபை எனும் பெயரில் செயற்படும் நிறுவனமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில் அந்நிறுவனத்தின் பிரதான பணிகள் யாவை என்பதையும்;

(iii) அந் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் இயங்கும் கட்டிடத்தின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதையும்;

(iv) அக்கட்டிடத்திற்காக மாதாந்தம் மற்றும் வருடாந்தம் செலுத்தப்படும் வாடகை எவ்வளவென்பதையும்;

(v) கமத்தொழில் அமைச்சு இயங்கும் கட்டிடத்திலேயே இந் நிறுவனத்தையும் தாபிப்பதற்கு அமைச்சிடமுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

144/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எதிர்வரும் 5 வருடங்களுக்கு இலங்கைக்கான மின்சக்தியின் தேவைப்பாடு குறித்து எதிர்வுகூறல் மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) அவ்வாறாயின், எதிர்வரும் 5 வருடங்களில் இலங்கைக்கான மின்சக்தியின் தேவைப்பாடு குறித்த தகவல்களை சமர்ப்பிப்பாரா;

(iii) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள உற்பத்தித் திட்டத்தின் விபரங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

175/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அவிசாவளை, கிழக்கு ஹேவாகம் கோரளையின் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால் நிர்வகிக்கப்படும் 24 கிராமிய வங்கிகளில் வைப்புச் செய்துள்ள சுமார் 115,000 வைப்பீட்டாளர்களுக்குரிய 95 கோடி ரூபாயிலான வைப்புப் பணம் மேற்படி வைப்பீட்டாளர்களுக்கு 2015 ஆம் ஆண்டு தொடக்கம் மீள வழங்கப்படவில்லை என்பதனை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வைப்பீட்டுப் பணத்தை உரிய வைப்பீட்டாளர்களுக்கு வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(ii) மேற்படி வைப்புப் பணத்தை உரிய வைப்பீட்டாளர்களுக்கு வழங்குவதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு;

என்பதை அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

237/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மிளகின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி மிளகு எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி மிளகை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு மிளகை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

269/2020

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அரசாங்கப் பாடசாலைகளில் கல்விப் பொதுத் தராதர உயர் தரத்தில் கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு டெப் கணினி (Tab) வழங்கும் வேலைத்திட்டத்திற்கென நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்ட வரவு செலவுத் திட்டம் யாது;

(ii) மேற்படி வேலைத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதித்தொகை எவ்வளவு;

(iii) மேற்படி வேலைத்திட்டத்தை செயற்படுத்துவதற்காக கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளனவா;

(iv) ஆமெனில், கேள்விப்பத்திரங்களை முன்வைத்துள்ள நிறுவனங்களின் பெயர்கள் யாவை;

(v) மேற்குறிப்பிட்ட நிறுவனங்களில் மேற்படி வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள நிறுவனத்தின் பெயர் யாது;

(vi) கேள்விப்பத்திர கோரலின்போது முன்வைக்கப்பட்டுள்ள விபரக் குறிப்பீடுகள் யாவை;

(vii) தற்போது குறிப்பிட்ட டெப் கணினிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளனவா;

(viii) இலங்கையில் அரசாங்கப் பாடசாலைகளில் கல்விப் பொதுத் தராதர உயர் தரத்தில் கல்வி பயிலும் அனைத்து மாணவ மாணவியர்களுக்கும், உயர் தர வகுப்புகளில் கல்வி கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும் டெப் கணினிகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

534/2020

கௌரவ ரோஹன பண்டார,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனத்திற்குச் சொந்தமான கிளைகளின் எண்ணிக்கை எத்தனை;

(ii) மேற்படி கிளைகள் அமைந்துள்ள இடங்களின் முகவரிகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) வரையறுக்கப்பட்ட லங்கா சதொச கிளை வலையமைப்பினை அநுராதபுரம் மாவட்டத்தில் மேற்கொண்டும் விஸ்தரிப்பதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

585/2020

கௌரவ வேலு குமார்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு உரித்தான ஏராளமான தேயிலைத் தோட்டங்கள் மத்திய மாகாணத்தில் அமைந்துள்ளன என்பதையும்;

(ii) அவை நீண்டகாலமாக நட்டத்தில் இயங்கி வருகின்றன என்பதையும்;

(iii) மேற்படி தோட்டங்களில் பணியாற்றி ஓய்வுபெற்றுள்ள தொழிலாளர்களுக்கான பணிக்கொடை, ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி ஆகிய அனுகூலங்கள் வழங்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு உரித்தான தேயிலைத் தோட்டங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி தோட்டங்களின் பெயர்கள் மற்றும் அவை அமைந்துள்ள மாவட்டங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேலே (ஆ) (i) இல் குறிப்பிடப்படும் தோட்டங்களில் அமைந்துள்ள தேயிலைத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் தற்போது இயங்கிவரும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி தொழிற்சாலைகளில் வெளித்தரப்பினர்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை மற்றும் அத்தொழிற்சாலைகளின் பெயர்கள் யாவை;

(iv) மேற்படி தொழிற்சாலைகளில் தற்போது மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாது;

(v) மேற்படி தொழிற்சாலைகளை மீளத் திறப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

658/2020

கௌரவ சாந்த பண்டார,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் அமைந்துள்ள புகையிரத நிலையங்களை படிப்படியாக அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) அளவ்வ புகையிரத நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு;

(ii) அதன் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனத்தின் பெயர் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அளவ்வ புகையிரத நிலையத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் பல வருட காலமாக தாமதமடைந்துள்ளன என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், மேற்படி அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

666/2020

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சர் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) குருநாகல் நகர மத்தியில் அமைந்திருந்த ஒரு தொன்மைமிக்க கட்டிடமே குருநாகல் நகரபிதாவால் தான்தோன்றித்தனமாக தகர்க்கப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) தொல்பொருளியல் திணைக்களத்தினால் குறிப்பிட்ட கட்டிடம் அமைந்திருந்த காணியில் தற்போது அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா;

(ii) தகர்க்கப்பட்ட மேற்படி கட்டிடம் எந்த யுகத்திற்குரியது;

(iii) மேற்படி கட்டிடத்தின் வரலாற்றுப் பெறுமதி யாது;

(iv) மேற்படி கட்டிடத்தை புனரமைத்துப் பேணுவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்வாரா;

(v) மேற்படி கட்டிடத்தைப் புனரமைப்பதற்குச் செலவாகும் நிதித்தொகை யாது;

(vi) மேற்படி நிதித்தொகையை செலவழிப்பதற்கு எதிர்பார்க்கும் நிதியம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

856/2020

கௌரவ நலின் பெர்னாந்து,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட லங்கா சதோச நிறுவனத்தினால் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள விற்பனைக் கிளைகளின் எண்ணிக்கை யாது;

(ii) இவற்றில் வருடாந்தம் இலாபம் ஈட்டும் மற்றும் நட்டமடையும் கிளைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி நட்டமடையும் கிளைகளை இலாபம் ஈட்டும் நிலைக்கு கொண்டு வருவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாது;

(iv) மேற்படி நட்டமடையும் கிளைகளை மூடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

(v) ஆமெனில், அதற்கான காரணம் என்ன;

(vi) புதிய கிளைகளை ஆரம்பிக்கையில் வரையறுக்கப்பட்ட லங்கா சதோச நிறுவனத்தினால் பின்பற்றப்படும் செயல்முறை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் ஷங்கிரி-லா ஹொட்டேல்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 திசெம்பர் 18 ஆம் திகதிய 2206/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.02.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் சினோலங்கா ஹொட்டேல்ஸ் அன்ட் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 திசெம்பர் 18 ஆம் திகதிய 2206/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.02.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 29 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2020 நவெம்பர் 17 ஆம் திகதிய 2202/7 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.02.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைத் திருத்துவதற்கான தீர்மானம்,— 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 16(1) ஆவது பிரிவின் ஊடாக ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அலுவல்களை நிறைவேற்றும் பொருட்டு அந்த ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக பணிப்பாளர் நாயகம் ஒருவரை நியமிப்பதற்கும், அப்பதவியை வகிப்பவருக்குப் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படும் சம்பளத்தைச் செலுத்துவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதனாலும்;

2015 ஆம் ஆண்டு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நியமனம் பெற்ற சனாதிபதி சட்டத்தரணி, திருமதி ஏ.ஏ.பி. தில்ருக்ஷி டயஸ் விக்கிரமசிங்க அவர்களும், 2016 ஆம் ஆண்டில் அப்பதவிக்கு நியமனம் பெற்ற சனாதிபதி சட்டத்தரணி, திரு. சரத் ஜயமான்ன அவர்களும், அவர்கள் தாம் முன்பு வகித்த பதவியின் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நியமனம் பெற்ற பின்பு கிடைக்கும் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளை விடவும் அதிக பெறுமதியைக் கொண்டிருந்தமையினால், அந்த அதிகாரிகளுக்குச் செலுத்த வேண்டிய சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைத் திருத்துவதற்கு, அமைப/16/0947/702/040 ஆம் இலக்க, 2016.06.14 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதனாலும்;

சனாதிபதி அவர்களினால் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2020.02.18 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு ஏற்புடைய அமைப/20/0443/201/012 ஆம் இலக்க, 2020.02.19 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு ஏற்ப இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு மேல் நீதிமன்ற நீதிபதியாகக் கடமையாற்றிய திரு. டப்ளியூ.கே. தமித் விஜேரத்ன அவர்கள் 2020.01.21 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளதனாலும்;

திரு. டப்ளியூ.கே. தமித் விஜேரத்ன அவர்கள் தற்போதைய பதவிக்கு நியமனம் பெற்ற பின்பு அவருக்கு கிடைக்க வேண்டிய சம்பளம் முன்னைய பதவியின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை விடவும் மிகவும் குறைந்த பெறுமதியையுடையதாக உள்ளதாலும்;

திரு. டப்ளியூ.கே. தமித் விஜேரத்னவின் கல்விப் பின்னணி மற்றும் தொழில்சார் திறமைகளைக் கருத்திற்கொண்டு அரசாங்கத்தின் தேவைப்படி அவர் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளமையினால், இதற்கு முன்னைய முன்மாதிரிக்கு ஏற்ப அவரது முன்னைய பதவியான மேல் நீதிமன்ற நீதிபதிப் பதவிக்கு ஏற்புடைய சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அவருக்குத் தனிப்பட்டதாக அமையும் வகையில் 2020.01.30 ஆம் திகதி முதல் பின்வருமாறு செலுத்துவதற்கு 2020.02.19 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் ஊடாக அனுமதி வழங்கப்பட்டதனாலும்:-

(அ) மேல் நீதிமன்ற நீதிபதிப் பதவிக்கு உரித்தான மாதாந்தச் சம்பளம் மற்றும் சகல கொடுப்பனவுகளையும் அதேபோன்று 2020.01.30 ஆம் திகதி முதல் வழங்குவதற்கு; மற்றும்

(ஆ) தற்போதைய பதவிக்கு ஏற்புடைய உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் உத்தியோகபூர்வ வாகனத்தைப் பயன்படுத்துவதாயின், அதற்கு ஏற்புடைய கொடுப்பனவுகளைச் செலுத்தாமலிருப்பதற்கும்;

அதற்கேற்ப, 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 16(2) ஆவது பிரிவின் பிரகாரம் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் திரு. டப்.கே. தமித் விஜேரத்ன அவர்களுக்கு திரட்டு நிதியத்திலிருந்து மேலே குறிப்பிடப்பட்ட மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2021 மார்ச் 10, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

45/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை விமானப் படை, அரச நிறுவனங்களுக்கு விமானச் சேவை வழங்கியதன் பொருட்டு அறவிட வேண்டிய நிலுவைத் தொகை உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில் அந்த அரச நிறுவங்கள் ஒவ்வொன்றினதும் பெயர், நிலுவைத் தொகை மற்றும் நிலுவையாக உள்ள காலம் என்பவற்றை வெவ்வேறாக சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) அந் நிலுவைத் தொகையை அறவிடுவதற்காக இலங்கை விமானப் படையினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

194/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய விளையாட்டுச் சபைக்கு நியமிக்கப்பட்டுள்ள புதிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவர்களது பெயர்கள் மற்றும் தகைமைகள் வெவ்வேறாக யாவை;

(iii) விளையாட்டுத் துறையின் மேம்பாட்டுக்காக அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் சேவைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

238/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட எதனோலின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி எதனோல் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி எதனோலை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு எதனோலை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

351/2020

கௌரவ புத்திக பத்திறண,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) போட்டித் தன்மையுடன் கூடிய வெளிநாட்டு உற்பத்திகளை இறக்குமதி செய்வதன் காரணமாக உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு பாதகமான தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன என்பதையும்;

(ii) இதனால் அவர்களுக்கு தமது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனத்திற்கு விற்பனைப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளும்போது உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்கான முறையியலொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா;

(ii) அவ்வாறாயின், அந்த முறையியல் யாது;

(iii) இன்றேல், முறையியலொன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா;

(iv) ஆமெனில், மேற்படி முறையியல் தயாரிக்கப்படும் விதம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

589/2020

கௌரவ வேலு குமார்,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கண்டி மாநகர சபையில் பணியாற்றும் தொழிலாளர்கள் குடியமர்ந்துள்ள மஹய்யாவ கிராமமானது கண்டி மாநகர சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கிராமம் உருவாக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாது;

(ii) அச்சந்தர்ப்பத்தில் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(iii) தற்போது இக்கிராமத்தில் காணப்படும் பதிவு இலக்கத்தைக் கொண்ட மின்சார வசதியுடன்கூடிய வீடுகளின் எண்ணிக்கை யாது;

(iv) மேற்படி வீடுகளில் குடியமர்ந்துள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கடந்த காலத்தில் மஹய்யாவ கிராமத்திற்கென புதிய வீடமைப்புத் திட்டமொன்று வடிவமைக்கப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ii) ஆமெனில், மேற்படி வீட்டுத் திட்டம் தொடர்பில் தெளிவுபடுத்துவாரா;

(iii) அத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

667/2020

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) A-17 வீதியில் ஹேயஸ்ட் தேயிலைத் தொழிற்சாலையை அண்டியதாக கொன்கலவை நோக்கிச் செல்லும் வீதியானது வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் அபிவிருத்தி செய்யப்படுமா;

(ii) மேற்படி வீதியானது, வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தானதா;

(iii) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்கு செலவாகும் பணத்தொகை எவ்வளவு;

(iv) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்கு முன்னுரிமையளிப்பதற்கான காரணம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

865/2020

கௌரவ அமரகீர்த்தி அதுகோரள,— பிரதம அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கென அங்கீகரிக்கப்பட்ட பதவியணி உள்ளதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி எண்ணிக்கையானது நிரந்தர மற்றும் அமய அடிப்படையில் எத்தனையென்பதையும்;

(iv) 2015 ஆம் ஆண்டு கூட்டுத்தாபனத்தில் காணப்பட்ட நிரந்தர மற்றும் அமய ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(v) 2015 முதல் 2019 வரை ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள நிரந்தர, அமய மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015 முதல் 2019 வரையான காலப்பகுதியில் ஏனைய அமைச்சுகளுக்கு விடுவிக்கப்பட்டிருந்த கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவர்களுக்குச் செலுத்தப்பட்ட சம்பளங்கள் உரிய அமைச்சுக்களிலிருந்து மீள்நிரப்பல் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி நிறுவனத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த 98 ஊழியர்கள், 2015 பொதுத் தேர்தலை இலக்காகக் கொண்டு வேறு அமைச்சுக்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர் என்பதனை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்டுள்ள சம்பளங்கள் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவுகளின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iii) அக்கொடுப்பனவுகள் மீள்நிரப்பல் செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) மேற்படி ஊழியர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்ட அதிகாரிகளுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1020/2020

கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை அப்போது காணப்பட்ட வர்த்தக, வாணிப மற்றும் நுகர்வோர் அலுவல்கள் அமைச்சுப் பொறுப்பை வகித்த அமைச்சர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி அமைச்சின் கீழ் காணப்பட்ட நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட அ(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனம், வரையறுக்கப்பட்ட லங்கா சதொச மற்றும் பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்களினால் பேணிவரப்படுகின்ற வர்த்தக நிறுவனங்களுக்குத் தேவையான பொருட்களை இறக்குமதி செய்கையில் அல்லது உள்நாட்டு ரீதியில் கொள்வனவு செய்கையில் பின்பற்றப்பட்டுள்ள நடவடிக்கை முறைகள் யாவை என்பதையும்;

(ii) மேற் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு பொருட்ளை இறக்குமதி செய்கையில் அல்லது உள்நாட்டு ரீதியில் கொள்வனவு செய்கையில் வெளிப்படைத்தன்மை பேணப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், ஏதேனும் முறைகேடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பாக முழுமையான கணக்காய்வு நடத்தப்படுமா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2021, மார்ச் 10, புதன்கிழமை)**

1354/2020

கௌரவ அநுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும், நிதி அமைச்சரும், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பிரதமர் செயலகத்திலும் பிரதமரின் தனிப்பட்ட பணியாட்டொகுதியிலும் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஊழியர்களின் எண்ணிக்கை நிறைவேற்று மற்றும் ஏனைய தரங்களுக்கு அமைவாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஊழியருக்கும் வழங்கப்படும் சம்பளங்கள், கொடுப்பனவு மற்றும் ஏனைய சிறப்புரிமைகள் யாவை என்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1355/2020

கௌரவ அநுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும், நிதி அமைச்சரும், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சனாதிபதி செயலகத்திலும் சனாதிபதியின் தனிப்பட்ட பணியாட்டொகுதியிலும் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஊழியர்களின் எண்ணிக்கை நிறைவேற்று மற்றும் ஏனைய தரங்களுக்கு அமைவாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஊழியருக்கும் வழங்கப்படும் சம்பளங்கள், கொடுப்பனவு மற்றும் ஏனைய சிறப்புரிமைகள் யாவை என்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2021 மார்ச் 12, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

46/2020

கௌரவ ஹேஷா விதானகே,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சப்ரகமுவ மாகாணத்திலுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மின்சாரத்தை வழங்குவதற்கான வேலைத் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) கடந்த நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த நாளிலிருந்து இன்றுவரை அவ்வேலைத் திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்கியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கையானது ஒவ்வோர் பிரதேச செயலகப் பிரிவு ரீதியில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) அக் குடும்பங்களை தெரிவு செய்யும் போது பின்பற்றிய நடைமுறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

176/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி வீதியின் கொழும்பிலிருந்து மொரட்டுவை வரையிலான பகுதியில் காணப்படுகின்ற அதிக வீதி நெரிசலைக் குறைக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் கரையோரப் பாதையின் (Marine Drive) நிர்மாணப் பணிகள் கொள்ளுப்பிட்டி தொடக்கம் தெஹிவளை – வாசல வீதி வரை மாத்திரமே மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் மந்தகதியிலேயே இடம்பெறுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அக்கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவினம் எவ்வளவு;

(ii) அக்கருத்திட்டத்திற்கான ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொண்ட நிறுவனத்தின் பெயர் யாது;

(iii) அக்கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி கருத்திட்டத்தின் காரணமாக சொத்துக்களை இழந்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நட்ட ஈட்டுத்தொகை எவ்வளவு;

(ii) மேற்கொண்டும் நட்டஈடு வழங்கப்பட எஞ்சியிருப்பின், அது எப்போது வழங்கப்பட எதிர்பார்க்கப்படுகின்றது;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

195/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நுரைச்சோலை பிரதேசத்தில் காற்று வலு மின் உற்பத்தி நிலையமொன்று அமைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி மின்நிலையத்தினால் பிறப்பிக்கப்படும் மின் அலகுகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி மின்நிலையத்தின் மின்மாற்றி செயலிழந்த திகதி மற்றும் அது திருத்தப்பட்ட திகதி ஆகியன வெவ்வேறாக யாவை;

(iii) மேற்படி மின்நிலையத்தை தொடர்ந்தும் அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

239/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளைப் பூடின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி வெள்ளைப் பூடு எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி வெள்ளைப் பூடை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு வெள்ளைப் பூடை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

352/2020

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுற்றுலாக் கைத்தொழில் துறையை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஹோட்டல்களுக்கும் உணவகங்களுக்கும் மதுபானம் விற்பனை செய்வதற்காக உரிமங்கள் வழங்கப்பட்டன என்பதையும்;

(ii) சுற்றுலாப் பயணிகளின் நடமாட்டம் இல்லாத பிரதேசங்களில் அமைந்துள்ள சில ஹோட்டல்களுக்கும் உணவகங்களுக்கும் கூட மதுபானம் விற்பனை செய்வதற்காக உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் மதுபானம் விற்பனை செய்வதற்காக ஹோட்டல்களுக்கும் உணவகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ள உரிமங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்தின் பிரகாரம் தனித்தனியாக எத்தனை;

(ii) மேற்படி உரிமங்கள் வழங்கப்பட்டுள்ள ஹோட்டல்களும் உணவகங்களும் அமைந்துள்ள பிரதேசங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) சுற்றுலாக் கைத்தொழில் துறையை மேம்படுத்தும் போர்வையில் இலங்கை பூராகவும் பேணிச் செல்லப்படுகின்ற மதுபான விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதன் காரணமாக மதுபாவனை அதிகரிப்பதனால் மதுபான விற்பனைக்காக உரிமங்கள் வழங்கப்படும் முறையை மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

535/2020

கௌரவ ரோஹண பண்டார,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையிலான ஒவ்வொரு போகத்திலும் அநுராதபுரம் மாவட்டத்தில் பெறப்பட்டுள்ள நெல் அறுவடையினையும்;

(ii) மேற்படி நெல் அறுவடையிலிருந்து நெற் சந்தைப்படுத்தல் சபையினால் ஒவ்வொரு போகத்திலும் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவினையும்;

தனித்தனியாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அநுராதபுர மாவட்ட விவசாயிகளின் நெல் அறுவடையின் பெரும்பகுதியை நெற் சந்தைப்படுத்தல் சபையின் மூலம் எதிர்காலத்தில் கொள்வனவு செய்வதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

605/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தின் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தின் பிரகாரம், 2020/2021 பெரும்போக பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக இரசாயனப் பசளை இலவசமாக வழங்கப்படுமா;

(ii) ஆமெனில், பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் மொத்த நிலப்பரப்புக்கும் பசளை வழங்கப்படுமா;

(iii) நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் மொத்த நிலப்பரப்புக்கும் பசளை வழங்கப்படுமா;

(iv) ஆமெனில், நெற் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் ஒரு ஏக்கருக்கு ஒவ்வொரு பசளை வகைகளில் வழங்கப்படும் அளவானது வெவ்வேறாக யாது;

(v) மேலதிக பயிர்களை பயிரிடுவதற்காக ஒரு ஏக்கருக்கு வழங்கப்படும் பசளையின் அளவு யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

659/2020

கௌரவ சாந்த பண்டார,— பிரதம அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் நகரம், இலங்கையில் அமைந்துள்ள ஒரு முக்கியமான நகரம் என்பதையும்;

(ii) இந்நகரம் ஒரு முறையியலுக்கமைவாக அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) குருநாகல் நகரை ஒரு முறையியலுக்கு அமைவாக அபிவிருத்தி செய்வதற்கான திட்டமொன்று இன்றளவில் தயார் செய்யப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், இத்திட்டத்தை செயற்படுத்துவதற்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்வதற்கான வேலைத்திட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், மேற்படி நிதி திரட்டப்படும் மூலங்கள் யாவை;

(iv) குருநாகல் நகரின் அபிவிருத்திப் பணிகளை துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

723/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இதுவரையில் தீயணைப்புப் பிரிவொன்று இன்மையால் எதிர்பாராத தீ விபத்துக்கள் இடம்பெறும் சந்தர்ப்பங்களில் உயிர் மற்றும் சொத்துச் சேதங்கள் ஏற்படுகின்றதென்பதையும்;

(ii) மன்னார் நகர சபைக்கும் முல்லைத்தீவு கரைத்துறைபற்று பிரதேச சபைக்கும் தீயணைப்புப் பிரிவுகளை பெற்றுத்தருவதாக வாக்குறுதியளித்திருந்த போதிலும், இதுவரை அவை வழங்கப்படவில்லையென்பதையும்;

(iii) மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் தீ விபத்து இடம்பெறும் சந்தர்ப்பங்களில் வவுனியாவிலிருந்து தீயணைப்பு வாகனம் வரவேண்டியிருப்பதுடன் இதற்கு சுமார் 1½ மணித்தியாலங்கள் செல்லுமென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கென தீயணைப்புப் பிரிவுகள் பெற்றுக்கொடுக்கப்படும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

859/2020

கௌரவ ஜகத் குமார,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் பொதுப் போக்குவரத்துக் கட்டமைப்பை வலுவூட்டுவதற்கான வேலைத்திட்டத்தின் கீழ் பேருந்துகள், புகையிரதங்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் முதலிய போக்குவரத்து ஊடகங்களை அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இலங்கையின் தற்போதைய போக்குவரத்துக் கட்டமைப்பை வலுவூட்டுவதற்காக தேவைப்படும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் தனித்தனியாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையின் சாரதி மற்றும் நடந்துநர் பதவிகளில் வெற்றிடங்கள் நிலவுவதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி பதவிகளில் நிலவும் வெற்றிடங்கள் தனித்தனியே எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தலங்கம டிப்போவினால் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அதன் பொருட்டு சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் உட்பட போதிய பணியாட்டொகுதியினர் உள்ளனரா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அவ்வெண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iv) இன்றேல், போக்குவரத்து சேவை இடம்பெறும் விதம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2021, மார்ச் 12, வெள்ளிக்கிழமை)**

1361/2020

கௌரவ அநுர திஸாநாயக்க,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் அமைந்துள்ள ஆறுகள் மற்றும் மணல் படிவுகளிலிருந்து மணல் அகழ்வதற்காக இதுவரையில் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள மணல் கரைசேர்க்கும் இடங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு அனுமதிப்பத்திரமும் வழங்கப்பட்டுள்ள ஆண்டு மற்றும் அனுமதிப்பத்திரதாரியின் பெயர் என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியினால் மேற்படி மணல் கரைசேர்க்கும் இடங்களினூடாக கரைசேர்க்கப்பட்ட மணலின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2021 மார்ச் 23, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

25/2020

கௌரவ ஹேஷா விதானகே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரையில் சேவையிலிருந்து நீக்கப்பட்ட புகையிரத பெட்டிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இவ்வாறு நீக்கப்பட்ட புகையிரத பெட்டிகளில் திருத்தப்பட்டு மீண்டும் சேவைக்குள் இணைக்கப்பட்ட புகையிரத பெட்டிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புகையிரத பெட்டிகளை திருத்தியமைத்த நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(iv) இதற்கென செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(v) சேவையிலிருந்து நீக்கப்பட்ட எஞ்சிய புகையிரத பெட்டிகளை மீண்டும் சேவையில் ஈடுபடுத்துவதற்கு அமைச்சு வசமுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

171/2020

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) லோ லெவல் வீதியில் அம்பதலே தொடக்கம் ஒருகொடவத்த வரையிலான பகுதியின் அபிவிருத்தி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வீதிக்கான அபிவிருத்திப் பணிகள் தாமதமடைவதற்கான காரணங்கள் யாவை என்பதையும் ;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வீதியில் இதுவரை அபிவிருத்தி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள அளவு மற்றும் பூர்த்தி செய்யப்படுவதற்கு எஞ்சியுள்ள அளவு;

(ii) மேற்படி வீதி அபிவிருத்திக் கருத்திட்டத்தின் காரணமாக சொத்துக்களை இழந்தவர்களுள் ஏற்கனவே நட்டஈடுகள் வழங்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை மற்றும் நட்டஈட்டுத் தொகை;

(iii) மேற்கொண்டும் நட்டஈடுகள் வழங்கப்படவிருக்குமாயின் குறிப்பிட்ட நபர்களின் எண்ணிக்கை மற்றும் நட்டஈடாக வழங்கப்படும் தொகை மற்றும் நட்டஈடு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி யாதென்பதை தனித்தனியாகவும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

181/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாண மாவட்டத்தின் ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் பிரிவில் எழுவைத்தீவு 4 வது வலயத்தைச் சேர்ந்த ஆறு பெண் பிள்ளைகளின் தந்தையாகிய திரு. அன்ரனி யேசுதாசன் கடந்த 2014.12.19 ஆம் திகதி எழுவைத்தீவு கடலில் தொழில் செய்து கொண்டிருந்தவேளை கடற்படையினரின் டோறாப்படகில் மோதி உயிரிழந்தார் என்பதையும்;

(ii) இலங்கை கடற்படையினரின் கவனயீனம் காரணமாக நிர்க்கதியாகியுள்ள யேசுதாசன் அவர்களின் பெண் பிள்ளைகளுக்கு இழப்பீடு வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) இது வரை இழப்பீடு வழங்கப்படவில்லை ன்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அப் பிள்ளைகளுக்கு எப்போது இழப்பீடு வழங்கப்படும் என்பதையும்;

(ii) மேற்படி மரணம் தொடர்பாக நான்கு ஆண்டுகளுக்கு முன் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) ஆமெனில், குறித்த வழக்கின் இலக்கம், யாரால், எந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்பதையும்;

(iv) படகொன்றில் மோதி இறந்ததற்கான வலுவான சாட்சிகள் நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்திருந்த போதிலும் இதுவரை ஏன் நீதி நிலைநாட்டப்படவில்லை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கடற் படையினரும் பொலிசாரும் அவர்களுக்கு அழுத்தம் கொடுக்கின்றனர் என்பதையும்;

(ii) பிள்ளைகளுக்கு அத்தகைய அழுத்தம் கொடுக்கப்படுவதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

196/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தொடர்ச்சியாக ஒன்பது மணித்தியாலங்களுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி மின்சாரத் துண்டிப்பு காரணமாக இலங்கைப் பொருளாதாரத்துக்கு ஏற்பட்ட நட்டம் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அது பற்றிய விபரங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

240/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட வாசனைத் திரவியங்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்களின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்;

(iii) மேற்படி வாசனைத் திரவியங்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி வாசனைத் திரவியங்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்களை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு வாசனைத் திரவியங்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

263/2020

கௌரவ புத்திக பத்திறண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2018 - 2019 பெரும்போகத்தின் போது ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக மாத்தறை மாவட்டத்தில் பயிர்ச் செய்கைக்கு சேதம் ஏற்பட்டதென்பதையும்;

(ii) அதற்கான நட்டஈடுகள் இதுவரையில் செலுத்தப்படவில்லையென்பதையும்;

(iii) அதன் காரணமாக விவசாயிகள் அசௌகரியத்திற்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்குறித்த போகத்தின் போது மாத்தறை மாவட்டத்தில் சேதமடைந்த செய்கை நிலப் பரப்பு யாதென்பதையும்;

(ii) அதனால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இதுவரை நட்டஈடு செலுத்தப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி நட்டஈட்டுத் தொகையினை செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

431/2020

கௌரவ சாந்த பண்டார,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையின் மத்திய அதிவேக நெடுஞ்சாலை தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருவதையும்;

(ii) அந்த அதிவேக நெடுஞ்சாலையின் ஒரு பகுதி அளவ்வ மற்றும் நாரம்மல பிரதேச செயலகப் பிரிவுகளினூடாக நிர்மாணிக்கப்படுவதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இந்த சாலை நிர்மாணிப்பதற்காக மேற்படி பிரதேசங்களில் வசிக்கும் குடும்பங்களிடமிருந்து சுவீகரிக்கப்பட்ட காணிகளின் அளவு யாது என்பதையும்;

(ii) மேற்படி சுவீகரிக்கப்புகளுக்கென நியாயமான இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், நியாயமான இழப்பீட்டுத் தொகையை வழங்கத் திட்டமிட்டுள்ள வேலைத்திட்டம் யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

457/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்தின் கல்கிரியாகம சுகாதார வைத்திய உத்தியோகத்தர் பிரிவின் கல்கிரியாகம குடும்ப சுகாதாரச் சேவைகள் உத்தியோகத்தர் பிரிவில் மகப்பேற்று சிகிச்சை நிலையம் நடாத்துவதற்கு பொருத்தமான இடமொன்று இல்லையென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகத்தில் உள்ள எவ்வித வசதியும் இல்லாத சிறிய அறையொன்றில் குறித்த சிகிச்சை நிலையம் நடாத்தப்படுகின்றதென்பதையும்;

(iii) அக்காரணத்தினால், கர்ப்பிணித்தாய்மார்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இப்பிரச்சினையை தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) கல்கிரியாகம குடும்ப சுகாதாரச் சேவைகள் உத்தியோகத்தர் பிரிவுக்கு மகப்பேற்று சிகிச்சை நிலையமொன்றை வழங்கும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

536/2020

கௌரவ ரோஹண பண்டார,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள அரசாங்க நெற் களஞ்சியசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவை அமைந்துள்ள இடங்களின் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நெற் களஞ்சியசாலைகள் ஒவ்வொன்றிலும் களஞ்சியப்படுத்தக் கூடிய கொள்ளளவு தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை மேற்படி ஒவ்வொரு நெற்களஞ்சியசாலையிலும் களஞ்சியப்படுத்தப்பட்ட நெல்லின் அளவு ஒவ்வொரு போகத்திற்கமைவாக தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி நெற் களஞ்சியசாலைகளின் வலைப்பின்னலை அநுராதபுரம் மாவட்டத்தில் மேலும் விரிவாக்குவதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

720/2020

கௌரவ கயந்த கருணாதிலக்க,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2016 ஆம் ஆண்டின் பின்னர் ஓய்வு பெற்றவர்களுக்காக 2020.01.01 ஆம் திகதி தொடக்கம் அதிகரிக்கப்படவிருந்த திருத்தப்பட்ட சம்பளம் செலுத்தப்படுதல் இடைநிறுத்தப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2020 ஆம் ஆண்டுக்கான கணக்கு வாக்குப் பணத்தின் மூலம் அதிகரிக்கப்படவிருந்த திருத்தப்பட்ட சம்பளம் வழங்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சம்பளம் செலுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) 2020.01.01 ஆம் திகதி தொடக்கம் செலுத்தப்பட வேண்டிய நிலுவைச் சம்பளத்தையும் அவர்களுக்குச் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) குறிப்பிட்ட திருத்தப்பட்ட சம்பளம் வழங்கப்பட வேண்டிய ஓய்வூதியப் பெறுநர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2021 மார்ச் 24, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

47/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் தற்போதுள்ள வெளிநாட்டு மதுபான விற்பனை நிலையங்கள் எனப்படும் வைன் ஸ்டோர்ஸ்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு வெளிநாட்டு மதுபான விற்பனை நிலையத்தினதும் அனுமதிப்பத்திரமுடையவர்களின் பெயர்கள், முகவரிகள், அனுமதிப்பத்திர இலக்கங்கள், அனுமதிப்பத்திரம் முதற் தடவையாக வழங்கப்பட்டுள்ள திகதி அல்லது வருடம் மற்றும் அவ்விற்பனை நிலையங்கள் நடாத்திச்செல்லப்படும் இடங்களின் முகவரிகள் ஆகியவற்றை வெவ்வேறாக யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) 2000 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை இலங்கையின் வருடாந்த மதுபான நுகர்வு செறிவு சதவீதம், ஒவ்வொரு வியாபாரப் பெயர் என்பவற்றின் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

177/2020

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையின் பிரதான வைத்தியசாலையொன்றாகிய கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற பதின்மூன்று மாடிகளைக் கொண்ட வாட்டுத் தொகுதியின் நிர்மாணப் பணிகள் மிகவும் மந்த கதியில் இடம்பெறுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வாட்டுத் தொகுதியினை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவுத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) குறித்த நிர்மாணப் பணிக்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ள நிறுவனம் யாதென்பதையும்;

(iii) மேற்படி நிர்மாணப் பணிகளை நிறைவு செய்ய எதிர்பார்க்கும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

197/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மின்சக்தி அமைச்சு தற்போது பேணப்பட்டுவரும் இடத்தின் முகவரி யாது;

(ii) அமைச்சு பேணப்பட்டுவரும் கட்டிடத்தின் உரிமையாளரது பெயர் மற்றும் முகவரி என்பன யாவை;

(iii) மேற்படி கட்டிடத்திற்காகச் செலுத்தப்படும் மாதாந்த வாடகை எவ்வளவு;

(iv) இலங்கை மின்சார சபை பாரிய நிதி நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளதொரு சந்தர்ப்பத்தில் மின்சக்தி அமைச்சினைப் பேணிவரும் கட்டிடத்திற்கு மாதாந்தம் பெரும் தொகை வாடகை செலுத்தப்படுவது தொடர்பில் தெரிவிக்கும் கருத்து யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

241/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயங்களின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்;

(iii) மேற்படி பெரிய வெங்காயங்கள் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி பெரிய வெங்காயங்களை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு பெரிய வெங்காயங்களை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

353/2020

கௌரவ புத்திக பத்திறண,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரத்தில் அமைந்துள்ள திசா வாவி பல்வேறு மனித செயற்பாடுகள் காரணமாக மாசடைந்துள்ளது என்பதையும்;

(ii) குடிநீர்த் தேவைகளுக்காகவும் சமயப் பணிகளுக்காகவும் நீரைப் பெற்றுக் கொள்வதால் முன்பிருந்தே இந்த வாவியில் நீராடுதல், துணி துவைத்தல் போன்ற மனித செயற்பாடுகள் தடைசெய்யப்பட்டிருந்தன என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) திசா வாவியின் நீரை தூய்மையாக வைத்துக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அந் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

537/2020

கௌரவ ரோஹண பண்டார,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்காக புலமைப்பரிசில் வழங்கும் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி வேலைத்திட்டம் -

(i) ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி வேலைத்திட்டத்தின் மூலம் இதுவரையில் பயன்களைப் பெற்றுக்கொண்ட பிள்ளைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி வேலைத்திட்டத்தை நிறுவத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பில் செல்வாக்குச் செலுத்தியுள்ள காரணிகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

553/2020

கௌரவ அஸோக அபேசிங்ஹ,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) குருணாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள தேசிய வீதிகள், மாகாண வீதிகள் மற்றும் கிராமிய வீதிகளின் நீளம் பிரதேச செயலகப் பிரிவுகளின் அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி வீதிகளில்,—

(i) காபட் இடப்பட்ட வீதிகளின் நீளம்;

(ii) தார் இடப்பட்ட வீதிகளின் நீளம்;

(iii) காபட் அல்லது தார் இடப்படாத வீதிகளின் நீளம்;

எவ்வளவு என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி (அ) இல் குறிப்பிட்ட கிராமிய வீதிகளின் நீளம் தனித்தனியாக உள்ளூராட்சி மன்றங்களின் அடிப்படையில் எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி கிராமிய வீதிகளைப் புனரமைப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

595/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) யாழ்ப்பாண மாவட்டத்தின், நெடுந்தீவில் அமைந்துள்ள ஒரேயொரு வைத்தியசாலையான நெடுந்தீவு வைத்தியசாலையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி தொடர்பான விபரம் யாது என்பதையும்;

(ii) கடந்த 08 வருடங்களாக அந்த வைத்தியசாலைக்கென இதுவரை நிரந்தர வைத்தியர் ஒருவர் நியமிக்கப்படாமைக்கான காரணம் யாது என்பதையும்;

(iii) வைத்தியர் ஒருவர் நியமிக்கப்படாமை காரணமாக நெடுந்தீவில் வாழும் மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள் யாவை என்பதையும்;

(iv) அந்த மக்களுக்கு சிறந்த மருத்துவ சேவையை வழங்குவதற்காக நெடுந்தீவு வைத்தியசாலையில் காணப்படுகின்ற பதவியணி வெற்றிடங்கள் எத்திகதியில் நிரப்பப்படும் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

609/2020

கௌரவ திலிப் வெதஆரச்சி,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1818 மற்றும் 1819 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற ஊவ – வெல்லஸ்ஸ போராட்டத்திற்கு ஹம்பாந்தோட்டை பிரதேசத்திலிருந்து தலைமைத்துவம் வழங்கிய வீரர்கள் பற்றிய தகவல்கள், தேசிய ஆவணக்காப்பகத் திணைக்களத்தில் காணப்படாமை தொடர்பில் தங்கள் அமைச்சின் அலுவலர் ஒருவரினால் ஆய்வொன்று நடாத்தப்பட்டுள்ளது என்பதுடன் குறித்த ஆய்வின் முன்னேற்றம் யாதென்பதையும்;

(ii) மேற்படி வீரர்கள் இராஜதுரோகிகளாக பெயரிடப்பட்டுள்ளமை தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஹம்பாந்தோட்டை மாவட்டச் செயலாளர் மேற்படி வீரர்களை, தேசிய வீரர்களாக பெயரிடுவது பொருத்தமானதென முன்மொழிந்திருப்பது அப்போதைய தேசிய மரபுரிமைகள் பற்றிய அமைச்சின் மேலதிகச் செயலாளரினால் நீதி அமைச்சின் மேலதிகச் செயலாளருக்கு (சட்டம்) அனுப்பப்பட்டுள்ள 2020.01.14 ஆம் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

660/2020

கௌரவ சாந்த பண்டார,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) புவிச்சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகம் எனுமொரு நிறுவனம் இலங்கையில் உள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் பிரதான பணிகள் யாவை;

(ii) புவிச்சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகத்தின் குருநாகல் பிராந்திய அலுவலகத்தினால் 2019 ஆம் ஆண்டினுள் வழங்கப்பட்டுள்ள அகழ்வு உரிமப்பத்திரங்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி உரிமப்பத்திரங்களை வழங்குவதன் மூலம் ஈட்டப்பட்டுள்ள வருமானம் எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2021 மார்ச் 25, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

48/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இதுவரை விநியோகிக்கப்பட்டுள்ள கெசினோ அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அந்த ஒவ்வொரு அனுமதிப்பத்திரமுடையவர்களின், பெயர்கள், முகவரிகள், அனுமதிப்பத்திர இலக்கங்கள், அனுமதிப்பத்திரம் முதற் தடவையாக வழங்கப்பட்டுள்ள திகதி அல்லது வருடம், அக்கெசினோ நிலையங்கள் நடாத்திச் செல்லப்படும் இடங்களின் முகவரிகள் ஆகியவற்றை வெவ்வேறாக யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) புதிய கெசினோ அனுமதிப்பத்திரங்களைப் பெறுவதற்காக இதுவரையில் விண்ணப்பித்துள்ளவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

198/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உலக வர்த்தக நிலையக் கட்டிடத்தில் இன்றளவில் பேணப்பட்டுவரும் அமைச்சுக்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி அமைச்சுக்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் என்பன தனித்தனியாக யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு அமைச்சினையும் பேணிச் செல்வதற்காக செலுத்தப்படும் வாடகைத் தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(iv) அரசாங்க அமைச்சுக்களை பேணிச் செல்வதற்காக அதிக வாடகை செலுத்துவது தொடர்பில் அரசாங்கத்தின் கருத்து யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

300/2020

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடுவலை நகரத்தில் காணப்படுகின்ற அதிக வாகன நெரிசலைக் குறைப்பதற்கென அரசாங்கத்தினால் ஏதேனும் வேலைத்திட்டம் முன்மொழியப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iii) மேற்படி வேலைத்திட்டம் எப்போது நடைமுறைப்படுத்தப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

354/2020

கௌரவ புத்திக பத்திறண, — சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போதுள்ள நீர்வீழ்ச்சிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி அனைத்து நீர்வீழ்ச்சிகளும் வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டு சட்டமயமாக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) இல்லையெனில், வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டு சட்டமயமாக்கப்படாத நீர்வீழ்ச்சிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி நீர்வீழ்ச்சிகளை வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் பிரகடனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மனித செயற்பாடுகள் காரணமாக வற்றிப்போயுள்ள நீர்வீழ்ச்சிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அத்தகைய மனித செயற்பாடுகள் யாவை என்பதையும்;

(iii) அதற்கு பொறுப்புக்கூற வேண்டிய ஆட்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) வற்றிப்போயுள்ள நீர்வீழ்ச்சிகளை மீண்டும் இயங்கு நிலைக்குக் கொண்டு வருவதற்கான சாத்தியம் தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், வற்றிப்போயுள்ள நீர்வீழ்ச்சிகளை மீண்டும் இயங்கு நிலைக்குக் கொண்டு வருவதற்கான முறை யாதென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

458/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அனுராதபுரத்திலிருந்து குருநாகல் நகருக்கு செல்லக் கூடிய குறுகிய வழி புல்னேவ - பொல்பிதிகம பாதை என்பதையும்;

(ii) அப்பாதையானது தலாவை சந்தியிலிருந்து பொல்பிதிகம சந்தி வரையிலான பகுதி தற்போது சேதமடைந்த நிலையில் உள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பாதையின் மேற்படி பகுதியை அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கென மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

538/2020

கௌரவ ரோஹன பண்டார,— போக்குவரத்து அமைச்சரிடம் கேட்பதற்கு,— (1)

(அ) அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்கும் பொருட்டு "சிசுசெரிய" நிகழ்ச்சித்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஆமெனில், இவ்விடயத்திற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தினை அனுராதபுரம் மாவட்டத்திற்குள் விரிவாக்குவதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

601/2020

கௌரவ உதயன கிரிந்திகொட,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மத்திய அதிவேக நெடுஞ்சாலை —

(i) கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(ii) கருத்திட்டத்திற்கு இன்றளவில் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

(iii) கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு செலவிடப்பட வேண்டியுள்ள எஞ்சிய தொகை எவ்வளவென்பதையும்;

(iv) கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த திகதி யாதென்பதையும்;

(v) கருத்திட்டத்திற்கு ஏற்புடையதாக கடந்த ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட முறைகேடுகள்/ தாமதங்கள் காரணமாக அதனை நிறைவுசெய்ய முடியுமென உத்தேசிக்கப்படுகின்ற திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இக்கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் —

(i) ஒப்படைக்கப்பட்டுள்ள கம்பனிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) தாமதம் இடம்பெற்றுள்ள கம்பனிகளுக்கு அதன் நிர்மாணப் பணிகள் மீள வழங்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இக்கருத்திட்டத்தின் கண்டி நகருக்கு அண்மித்த இறுதி நுழைவு காணப்படுகின்ற பிரதேசம் யாதென்பதையும்;

(ii) கண்டியிலிருந்து கலகெதர வரையான வீதியில் காணப்படுகின்ற கடுமையான வாகன நெரிசல் காரணமாக அதன் ஊடாக அதிவேக நெடுஞ்சாலைக்குள் பிரவேசிப்பதற்கு 30-45 நிமிடங்கள் வரை எடுப்பதால் கண்டி பிரதேச மக்களுக்கு இலகுவாக அதிவேக நெடுஞ்சாலைக்கு பிரவேசிப்பதற்கு நுழைவு வீதி அமைக்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி அதிவேக நெடுஞ்சாலை நுழைவுகள் நிர்மாணிக்கப்படும் பிரதேசங்கள் யாவை என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

661/2020

கௌரவ சாந்த பண்டார,— பிரதம அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அலவ்வ நகரமானது, அபிவிருத்தித் திட்டமொன்றுக்கு ஏற்ப முறையாக அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) அலவ்வ நகரத்தின் பொருட்டு நகர அபிவிருத்தித் திட்டமொன்று தயார்செய்யப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகளின் அளவு யாது;

(iii) மேற்குறிப்பிட்ட நிதி ஏற்பாட்டை ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

670/2020

கௌரவ நலின் பண்டார,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது நிர்மாணிக்கப்பட்டுவரும் கீழ் உமா ஓயா நீர்ப்பாசன கருத்திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்படும் குளங்கள் மற்றும் கால்வாய்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) அக்கருத்திட்டத்தின் மூலமாக நீரைப் பெறும் குளங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் மூலமாக பயிர் செய்யக்கூடிய மேட்டு மற்றும் சேற்று நிலங்களின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகளுக்குச் செலவாகும் தொகை எவ்வளவு என்பதையும்;

(v) எந்த நிதியங்களிலிருந்து மேற்படி தொகை பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதையும்;

(vi) மேற்படி கருத்திட்டத்தினை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

870/2020

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்தையும்;

(ii) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அப்பாடசாலைகளில் தற்போது பணியாற்றும் அதிபர்களது கல்வித் தகைமைகள் மற்றும் அவர்கள் உரிய பாடசாலைகளில் அதிபர்களாக பணியாற்றும் காலப்பகுதிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தேசிய பாடசாலைகளுக்காக உரிய தகைமைகளைக் கொண்ட அதிபர்களை நியமிப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2021 மார்ச் 26, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

67/2020

கௌரவ ஹேஷா விதானகே,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்திற்கமைய கழிவு முகாமைத்துவம் எனும் விடயம் மாகாண சபைகளின் கீழ் வருகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறாயின், மாகாண சபை முறை ஆரம்பிக்கப்பட்டது முதல் இது வரை திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்கென பிரத்தியேகமான நிறுவனங்களை அமைத்துள்ள மாகாண சபைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) அவ்வாறான விசேட நிறுவனம் அமைக்கப்படாத மாகாண சபைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அவ்வாறான நிறுவனம் அமைக்கப்படாத மாகாண சபைகளுக்கென விசேட நிறுவனத்தை அமைப்பது தொடர்பில் அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

199/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சரும், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் காணப்படுகின்ற அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்களின் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் எண்ணிக்கை;

(ii) அவற்றின் பெயர்கள்;

தனித்தனியே யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவற்றில் தனியார் கட்டிடங்களில் அமைச்சுக்களை பேணிவரப்படுகின்ற அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்களின் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் எண்ணிக்கை;

(ii) அவற்றின் பெயர்கள்;

(iii) அவற்றுக்காக செலுத்தப்படுகின்ற மாதாந்த வாடகைத் தொகை;

தனித்தனியே யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) தனியார் கட்டிடங்களில் பேணிவரப்படுகின்ற அமைச்சுக்களை அரசாங்க கட்டிடங்களுக்குக் கொண்டு செல்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

242/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகன உதிரிப் பாகங்களின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்;

(iii) மேற்படி மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி மோட்டார் வாகன உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு மோட்டார் வாகன உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

355/2020

கௌரவ புத்திக பத்திறண, — நீர்வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குடிநீர் வழங்கப்படுகின்ற அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள வாவிகளின் நீரின் தரம் வீழ்ச்சியடைந்துள்ளது என்பதையும்;

(ii) E-coli உள்ளிட்ட பல்வேறு கிருமிகள் கலந்துள்ளதால் இந்நீர் மக்களின் சுகாதாரத்திற்குப் பாதகமானது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்காக பயன்படுத்தப்படுகின்ற அநுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள வாவிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வாவிகளிலுள்ள நீரின் தரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

519/2020

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வாழைச்சேனையில் அமைந்துள்ள கடற்றொழில் துறைமுகத்தில் சாதாரண இழுவைப் படகுகளை கையாளுவதற்கான வசதிகள் உள்ள போதும் அதன் நுழைவாயில் மற்றும் ஆழம் போதுமானதாக இல்லாததால் மிகப் பெரிய இழுவைப் படகுகளை கையாளுதல் பிரச்சினையான விடயமொன்றாகி உள்ளதோடு, இதன் காரணமாக உள்நாட்டு கடற்றொழிலாளர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளார்கள் என்பதையும்;

(ii) மேற்படி கடற்றொழில் துறைமுகத்தை விரிவாக்குவதன் தேவையொன்று உள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கடற்றொழில் துறைமுகத்தை விரிவாக்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

543/2020

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2015 ஆண்டு தொடக்கம் 2018 வரையான காலப்பகுதியில் இலங்கையின் தேசிய பாடசாலைகளுக்கான கல்விசாரா பதவியணிகளுக்கு ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு தேசிய பாடசாலைக்கும் இவ்வாறு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பதவிப் பெயர்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு தேசிய பாடசாலைக்கும் இவ்வாறு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியே எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

671/2020

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அண்மையில் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட பிங்கிரிய கிணியம நிர்ப்பாசனத் திட்டத்தின் உத்தேசிக்கப்பட்ட எதிர்கால பணிகளுக்குச் செலவாகும் நிதி எவ்வாறு திரட்டப்படும் என்பதையும்;

(ii) மேற்படி உத்தேசிக்கப்பட்ட பணிகளுக்குச் செலவாகும் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி உத்தேசிக்கப்பட்ட பணிகளுக்காக எவ்வளவு காலம் செல்லும் என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தின் மூலமாக நீரைப் பெறும் குளங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

757/2020

கௌரவ அமரகீர்த்தி அத்துகோரள,— வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) பொலன்னறுவை மாவட்டத்தில் —

(i) காட்டு யானைகளின் நடமாட்டம் தொடர்பாக ஆய்வு நடத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) காட்டு யானைகள் அதிகளவில் நடமாடும் தேசிய வனப் பூங்காக்கள் மற்றும் வன ஒதுக்கங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) யானை கொரிடோக்கள் இருப்பின், அவை அமைந்துள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(iv) யானை கொரிடோக்களுக்கு குறுக்கே கிராமங்கள் அல்லது மக்கள் குடியிருப்புப் பகுதிகள் இருப்பின், அவை யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு செப்டெம்பர் வரை மாவட்டத்தில் யானை - மனித மோதல் காரணமாக —

(i) உயிரிழந்த ஆட்கள் மற்றும் யானைகளின் எண்ணிக்கை பிரதேச செயலகப் பிரிவு வாரியாக எவ்வளவென்பதையும்;

(ii) சேதமடைந்துள்ள வீடுகளின் எண்ணிக்கையானது வருட வாரியாக எவ்வளவென்பதையும்;

(iii) உயிரிழந்த மற்றும் சொத்துக்களை இழந்தவர்களுக்கு செலுத்தப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை ஒவ்வொரு நபர் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மாவட்டத்தில் யானை-மனித மோதலை கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப் பட்டுள்ள புதிய நடவடிக்கைகள் யாவை என்பதை மேலும் அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

803/2020

கௌரவ சிவஞானம் சிறிதரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தின் கரச்சி பிரதேச செயலாளர் பிரிவில் கிளி/வட்டக்கச்சி மத்திய மகா வித்தியாலயம் என்ற பெயரில் ஒரு பாடசாலை உள்ளதென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலையின் பொருட்டு புதிய கேட்போர் கூடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2017ஆம் ஆண்டில் அடிக்கல் நாட்டப்பட்டது என்பதையும்;

(iii) ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் விடுவிக்கப்படாமை காரணமாக கேட்போர் கூடத்தை நிர்மாணிக்கும் பணிகள் இன்றளவில் நிறுத்தப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கேட்போர் கூடத்தை நிர்மாணிப்பதற்காக நிதி ஏற்பாடுகளை ஒதுக்கிய அமைச்சு யாது என்பதையும்;

(ii) மேற்படி நிதி ஏற்பாடுகள் விடுவிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி கேட்போர் கூடத்தை முழுமையாக நிர்மாணிப்பதற்குத் தேவையான தொகை எவ்வளவு;

(ii) அதற்கென நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்படும் திகதி யாது;

(iii) மேற்படி நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டுக்காக அதனை வழங்க எடுக்கும் காலம் யாது;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

871/2020

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போக்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு டிப்போவிலும் தற்போது போக்குவரத்தில் ஈடுபடுத்தக்கூடிய நிலையிலுள்ள பேரூந்துகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு டிப்போவிலும் தற்போது நிலவும் ஊழியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) திருகோணமலை மாவட்டத்திலுள்ள டிப்போக்களின் மனித வளம் மற்றும் அந்த டிப்போக்களில் காணப்படும் பேரூந்துத் தொகுதிகள் என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2021 ஏப்ரல் 06, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

26/2020

கௌரவ ஹேஷா விதானகே,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வேலையற்ற பட்டாதாரிகளை நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் அரச நிறுவனங்களில் பயிலுநர் பயிற்சிக்கு சேர்த்துக்கொள்வதற்கு 2020 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பத்திரத்திற்கு அமைவாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த பட்டதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நேர்முகப் பரீட்சைக்காக தோற்றிய பட்டதாரிகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு மாவட்டத்தின் அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iii) நேர்முகப் பரீட்சையின் பின்னர் பயிற்சிக்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட பட்டதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) குறித்த பயிற்சிக்காக சேர்த்துக்கொள்ளும் போது இப்பட்டதாரிகள் வெளிவாரி மற்றும் உள்வாரி பட்டதாரிகள் என்ற அடிப்படையில் வகைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனரா என்பதையும்;

(ii) ஆமெனின், சேர்த்துக்கொள்ளப்பட்ட வெளிவாரி பட்டதாரிகளின் எண்ணிக்கை மற்றும் உள்வாரி பட்டதாரிகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு மாவட்ட அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iii) வெளிவாரி பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதங்களை பெற்றுக்கொடுக்கும் போது சிக்கலான நிலைமை தோன்றியமைக்கான காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

66/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை புகையிரத போக்குவரத்து சேவைக்கு இணைக்கப்பட்டுள்ள புகையிரதப் பெட்டிகளின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி புகையிரதப் பெட்டிகளில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட புகையிரத பெட்டிகளின் எண்ணிக்கை மற்றும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட புகையிரத பெட்டிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) நமது நாட்டில் புகையிரத பெட்டிகளை உற்பத்தி செய்வதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும் அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

108/2020

கௌரவ புத்திக பத்திறண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையிலுள்ள சிறுவர்களுக்கு வழங்கப்படும் திரிபோஷ துணை போசணை போதியளவிலும் ஒழுங்குமுறையாகவும் கிடைப்பதில்லை என்பதையும்;

(ii) சிறுவர் மந்தபோசணை கணிசமானளவு காணப்படுவதற்கு இவ்விடயமும் காரணமாக அமைகின்றதென்பதையும்;

(iii) இதன் காரணமாக பிள்ளைகளைக் கொண்டிருக்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றார்கள் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) தற்போது, ஆண்டுக்கான திரிபோஷ உற்பத்திக் கொள்ளளவு எத்தனை கிலோகிராம் என்பதையும்;

(ii) ஓராண்டின் நுகர்வுக்காக எத்தனை கிலோகிராம் திரிபோஷ தேவைப்படுகின்றதென கணிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்தளவு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) நாட்டின் தேவைக்கு போதுமானளவு திரிபோஷ உற்பத்திசெய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எப்படியென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

169/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொலொன்னாவ பிரதேச செயலகப் பிரிவில் காணி உறுதியற்ற வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி வீடுகளுக்கு உறுதியினை வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

227/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— பெருந்தோட்ட அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சோளத்தின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி சோளம் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி சோளம் இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு சோளத்தினை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

419/2020

கௌரவ வருண லியனகே,— பெருந்தோட்ட அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் தோட்டங்களில் வசிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை யாது?

(ii) இவர்களுக்கு வீடுகளை அமைப்பதற்கான காணிகள் வழங்கப்பட்டுள்ளனவா;

(iii) ஆமெனில், காணிகள் வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(iv) அந்தக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணியின் அளவு யாது;

(v) அவ்வாறாயின் காணிகள் வழங்கப்பட்டுள்ள குடும்பங்கள் சார்ந்துள்ள தோட்டக் கம்பனிகள் யாவை;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) காணிகளற்ற தோட்டக் குடும்பங்களுக்கு காணிகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை எத்தகைய நடவடிக்கைகள் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

451/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மொரகஹகந்த - களுகங்கை அபிவிருத்திக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு வட மத்திய மாகாணத்திற்கு நீர் வழங்கும் நடவடிக்கையாக தற்போது பொலன்னறுவை மாவட்டத்திற்கு நீர் வழங்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படிக் கருத்திட்டத்தின் கீழ் அனுராதபுர மாவட்டத்திற்கு நீர் வழங்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி திட்டங்களின் மூலம் குருளுவெவ வாவி மற்றும் கணதராவவெவ வாவி என்பவற்றுக்கு நீர் வழங்குவதற்கான திட்டம் உள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

483/2020

கௌரவ துஷாரா இந்துனில் அமரசேன,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தேசிய கமத்தொழில் தகவல், தொடர்பாடல் நிலையத்தினால் இலங்கையின் பயிர்நிலையங்களில் கிருமிநாசினி, களைநாசினி மற்றும் உரப் பயன்பாடு தொடர்பாடல் ஆராய்ச்சியொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) கிருமிநாசினி, களைநாசினி மற்றும் உரம் பயன்படுத்தி பயிர்செய்யும் நாடுகளில் இலங்கை முன்னிலை அடைந்துள்ள நாடொன்று என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) கிருமிநாசினி, களைநாசினி மற்றும் உரம் பயன்படுத்தி பயிர் செய்கை மேற்கொள்வதைக் குறைப்பதற்கு அமைச்சு எடுக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

544/2020

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு:— (1)

(அ) (i) மண்சரிவு அபாயமுள்ள மாவட்டங்களில் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு அங்கீகாரம் பெற வேண்டிய நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) அத்தகைய நிறுவனங்கள் மூலம் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்படும் வழிமுறை யாதென்பதையும்;

(iii) அந்த வழிமுறைக்கமையவே கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கென எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மண்சரிவு அபாயம் இல்லாத மாவட்டங்களில் கட்டிடங்களை நிர்மாணிக்கும் போது சம்பந்தப்பட்ட உள்ளூர் அதிகார சபையினால் மட்டுமே அங்கீகாரம் வழங்கப்படுகிறது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி மாவட்டங்களில் கட்டிடங்களை நிர்மாணிக்கும் போது, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் மற்றும் புவிச்சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகத்தினால் மேற்பார்வை செய்யப்படுகின்றதா என்பதையும்;

(iii) மேற்பார்வை செய்யப்படுமாயின், கட்டிடங்கள் வகைப்படுத்தப்பட்டு அங்கீகாரம் வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) இன்றேல், எதிர்காலத்தில் அவ்வாறானதொரு வேலைத்திட்டம் தயாரிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

556/2020

கௌரவ அஸோக அபேசிங்ஹ,— நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை குருணாகல் மாவட்டத்தில் செயற்படுத்தப்பட்ட பிரதான நீர் விநியோகத் திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நீர் விநியோகத் திட்டங்களின் மூலம் உள்வாங்கப்படுகின்ற பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) அதன் மூலம் உள்வாங்கப்படுகின்ற கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் பெயர்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(v) மேற்படி நீர் விநியோகத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒவ்வொரு திட்டத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி நீர் விநியோகத் திட்டம் நிறைவுசெய்யப்படவுள்ள கால எல்லை ஒவ்வொரு திட்டத்திற்கமைய வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2021 ஏப்ரல் 07, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

27/2020

கௌரவ ஹேஷா விதானகே,— சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்தள சர்வதேச விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நிதி திரட்டப்பட்ட மூலங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மத்தள சர்வதேச விமான நிலையம் திறக்கப்பட்ட திகதி தொடக்கம் இதுவரை —

(i) கிடைத்த வருமானம்;

(ii) பராமரிப்புப் பணிகளுக்காக செலவிடப்பட்ட தொகை;

தனித்தனியே எவ்வளவென்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி விமான நிலையம் திறக்கப்பட்ட திகதி தொடக்கம் இற்றைவரையில் அங்கு வந்திறங்கிய விமானங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி விமானங்கள் எந்தெந்த விமானசேவை நிறுவனங்களுக்குச் சொந்தமானவை என்பதையும்;

(iii) இக்காலப்பகுதியில் மேற்படி விமானநிலையத்தின் ஊடாக பயணித்த பயணிகளின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) இவ்விமான நிலையத்தை தொடர்ந்தும் அபிவிருத்தி செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் மேலும் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

130/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள மாநகர சபைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி மாநகர சபைகளில் கழிவுகளை அகற்றும் விடயத்தை தனியார் நிறுவனங்களுக்கு கையளித்துள்ள மாநகர சபைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மாநகரசபைகளின் கழிவுகளை அகற்றும் பணிகளை பொறுப்பேற்றுக் கொண்டுள்ள தனியார் கம்பனிகள் யாவையென்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை மேற்படி கம்பனிகளுக்கு செலுத்தப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) உள்ளூராட்சி நிறுவனங்களின் ஊழியர்களை ஈடுபடுத்தி அவற்றின் ஆளுகைப் பிரதேசத்திலுள்ள கழிவுகளை அகற்றுவதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கை யாதென்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

191/ 2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கிளிநொச்சி, நகர மத்தியில் அமைந்துள்ள பொது விளையாட்டு மைதானத்தை சர்வதேச தரத்திலான விளையாட்டு மைதானமாக அபிவிருத்தி செய்வதற்கு 2010 ஆம் ஆண்டில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இற்றைக்குப் பத்து ஆண்டுகள் கடந்துள்ளபோதும், அந்த மைதானத்தை மாவட்டத்திலுள்ள விளையாட்டு வீரர்களின் பயன்பாட்டுக்காக இதுவரை ஒப்படைக்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி விளையாட்டு மைதானம் சர்வதேச மட்டத்திலான விளையாட்டு மைதானமா; இன்றேல் மாவட்ட மட்டத்திலான விளையாட்டு மைதானமா என்பதையும்;

(ii) விளையாட்டு மைதானத்தின் நிர்மாணப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி தொகையில் கடந்த பத்து வருட காலப்பகுதியில் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டுள்ள ஒப்பந்தக்கார்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) நிர்மாணப் பணிகளை மேற்கொள்கின்ற தற்போதைய ஒப்பந்தக்காரரின் பெயர் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி விளையாட்டு மைதானத்தின் புனர்நிர்மாணப் பணிகளில் ஏற்பட்டுள்ள தாமதம், மாவட்டத்திலுள்ள விளையாட்டு வீரர்களின் செயற்பாடுகளுக்கு எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதையும்;

(ii) மாவட்டத்தில் விளையாட்டு நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்காக அமைச்சினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

229/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பால் மாவின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பால் மா எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி பால் மா இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு பால் மாவை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

266/2020

கௌரவ புத்திக்க பத்திறண,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களனிவெலி புகையிரதப் பாதையின் இருமருங்கிலும் காணப்படுகின்ற வீதி ஒதுக்குப் பிரதேசத்தில் வசித்துவருகின்றவர்கள் தொடர்பாக கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்குடும்ப அலகுகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி குடும்ப அலகுகளை வீதி ஒதுக்குப் பிரதேசத்திலிருந்து அகற்றி வேறொரு இடத்தில் குடியமர்த்துவதற்கான திட்டம் உள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அவர்களை குடியமர்த்துவதற்கு எதிர்பார்க்கும் பிரதேசம் யாது என்பதையும்;

(v) அதற்காக செலவிடப்படும் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

485/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நெல் சந்தைப்படுத்தல் சபை ஸ்தாபிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) அது ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) நெல் சந்தைப்படுத்தல் சபையினால் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை ஒவ்வொரு போகத்திலும் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு யாது என்பதையும்;

(iv) தனியார் துறையின் வியாபாரிகளினால் விவசாயிகளிடமிருந்து குறைந்த விலைக்கு நெல் கொள்வனவு செய்யப்படுவதை தவிர்க்கும் பொருட்டு நெல் சந்தைப்படுத்தல் சபையை வலுவூட்ட அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

610/2020

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) குளியாப்பிட்டி ஆதார வைத்தியசாலை, போதனா வைத்தியசாலையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலையை இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின், மருத்துவ பீடத்தின் பிணியாய்வு பயிற்சிகளுக்குப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) இது தொடர்பான விடயங்களை ஆய்வு செய்வதற்காக மூன்றுபேர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதை அவர் அறிவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் மற்றும் குளியாப்பிட்டி போதனா வைத்தியசாலை தொடர்பில் பேராசிரியர் அலகு அமைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி அலகினை குளியாப்பிட்டி வைத்தியசாலையில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1352/2020

கௌரவ இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முன்னர் அமைந்திருந்த அளுத்கம மற்றும் தர்கா நகர் போன்ற சிறு நகர சபை அதிகாரப் பிரதேசங்களுக்குரிய பகுதிகள் கடல் மட்டத்திற்கு கீழே அமைந்திருந்தமையினால் அடிக்கடி வெள்ளத்தில் மூழ்கின என்பதையும்;

(ii) இதன் காரணமாக அப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கும் அவர்களது உடைமைகளுக்கும் ஏற்படுகின்ற சேதங்களைக் குறைக்கும் நோக்கத்துடன் 1993 ஆம் ஆண்டு ஆசிய அபிவிருத்தி வங்கியினது உதவித் திட்டத்தின் கீழ் அப்பிரதேசங்களுக்கென மேற்பரப்பு வடிகால் முறைமையொன்றை அமைப்பதற்கான கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டதென்பதையும்;

(iii) அளுத்கம பிரதேசம் உள்வாங்கப்படும் வகையில் மேற்படி கருத்திட்டத்தின் முதலாம் கட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும், அதன் இரண்டாம் கட்டம் இதுவரை நடைமுறைப்படுத்தப்படாததன் காரணமாக அப்பிரதேசங்களில் வாழும் மக்கள் மேற்கொண்டும் பாதிக்கப்படுகின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா;

(ii) அவ்வாறாயின், அதற்கான வேலைத்திட்டம் யாது;

(iii) மேற்படி வேலைத்திட்டம் எப்போது ஆரம்பிக்கப்படும்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2021 ஏப்ரல் 08, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

68/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இரத்தினபுரி மாவட்டத்தில் வீடு ஒன்றை நிர்மாணிக்கத் தேவையான காணி இல்லாத 6579 குடும்பங்கள் உள்ளன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அரசாங்கம் மேற்படி குடும்பங்களுக்கு வீடுகளை அமைக்கத் தேவையான காணிகளை அரச தோட்டக் கம்பனிகளின் உடைமையிலுள்ள காணிகளிலிருந்து வழங்க நடவடிக்கை எடுக்குமா என்பதையும்;

(ii) இன்றேல், அரசாங்கம் இவ்விடயம் தொடர்பில் எடுக்க எதிர்பார்த்துள்ள மாற்று நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

135/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிநாடுகளிலுள்ள இலங்கையின் வெளிநாட்டு தூதுக்குழுக்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு தூதுக்குழு அமைந்துள்ள நாடுகள் மற்றும் நகரங்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு தூதுக்குழுவிலும் சேவையாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் பதவிப் பெயர்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

(iv) மேற்படி ஊழிர்களில் நேரடியாவே இலங்கை வெளிநாட்டுச் சேவைக்கான ஆட்சேர்ப்பு பரீட்சையில் சித்தியடைந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களது பெயர்கள் யாவை என்பதையும்;

(v) வெளிநாட்டு தூதுக்குழுக்களில் சேவையாற்றும் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கையில் இலங்கை வெளிநாட்டுச் சேவையில் நேரடியாக உள்ளடங்கும் ஊழியர்களின் விகிதாரசாரம் யாதென்பதையும்;

(vi) வெளிநாட்டு தூதுக்குழுக்களில் சேவையாற்றுவதற்காக இலங்கை வெளிநாட்டுச் சேவைக்கு கூடுதலாக உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்வதற்கு அமைச்சு எதிர்காலத்தில் மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்தையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

267/2020

கௌரவ புத்திக பத்திறண ,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொத்மலையில் அமைந்துள்ள நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவம் பற்றிய சர்வதேச பயிற்சி நிறுவனத்தில் பயிற்சிப்பெற்றுள்ள பொறியியல் உதவியாளர் இரண்டாம் குழுவின் பயிலுனர்கள் 71 பேர் இதுவரை நிரந்தர சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படவில்லை என்பதையும்;

(ii) தற்போது அவர்களின் பயிற்சி நிறைவடைந்து ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலம் கடந்துள்ளது என்பதையும்;

(iii) பிராந்திய அலுவலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டு சேவையாற்றி வருகின்ற போதிலும், அவர்களுக்கு முறையான சம்பளம் செலுத்தப்படுவதில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பயிலுனர்கள் நிரந்தர சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்களா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

301/2020

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சரும், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 மே களனி கங்கை பெருக்கெடுத்ததன் காரணமாக கொழும்பு மாவட்டத்தைப் பாதித்த வெள்ளப்பெருக்கின் விளைவாக பாதிப்புக்குள்ளான மக்களுக்கு செலுத்தப்பட்ட நட்ட ஈட்டுத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வெள்ளப்பெருக்கின் காரணமாக பாதிப்பட்டபோதிலும் குறித்த நட்ட ஈட்டுத்தொகை கிடைக்கப்பெறாத கொலன்னாவ பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கின்ற குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இது தொடர்பில் முன்வைக்கப்பட்ட மேன் முறையீட்டினை கருத்திற்கொண்டு ரூ. 20,000/- வீதம் நட்டஈடு வழங்குவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், குறித்த நட்ட ஈட்டுத் தொகை வழங்கப்படும் முறையியல் யாதென்பதையும்;

(iii) மேற்படி நட்ட ஈட்டுத் தொகை வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

434/2020

கௌரவ சாந்த பண்டார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) டெங்கு நோய்த்தாக்கம் பல்வேறான சந்தர்ப்பங்களில் இலங்கையில் அதிகரிக்கின்றது என்பதனை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) 2019 ஆம் வருடத்தில் டெங்கு நோய் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) டெங்கு நோயை ஒழிப்பதற்காக தேசிய மற்றும் பிரதேச மட்டத்தில் ஏதேனும் வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(iii) பிரதேச டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட தொழிலாளர்கள் உள்ளனர் என்பதனை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) அவ்வாறெனில், அவர்களது சேவையை தொடர்ச்சியாகப் பெறுவதற்கு வேலைத்திட்டம் ஏதேனும் உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

453/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அனுராதபுர மாவட்டத்தின் கஹட்டகஸ்திகிலிய பிரதேச செயலகப் பிரிவின் 215 ஆம் இலக்க திவுல்வெவ கிராம உத்தியோகத்தர் பிரிவின் பம்பரஎல கிராமத்தில் 1973 ஆம் ஆண்டு தொடக்கம் சேனைப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளின் அறுதி உறுதிகளுடன் கூடிய காணிகளுக்கு வனசீவராசிகள் உத்தியோகத்தர்கள் பிரவேசித்து ஒதுக்க எல்லைகளை அடையாளமிட்டு எல்லைக் கற்கள் இட்டுள்ளனர் என்பதை அறிவாரா?

(ஆ) ஆமெனில், இவ்விடயம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

547/2020

கௌரவ சந்திம வீரக்கொடி,— நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) ஹபராதுவ, அக்மீமன, காலி மற்றும் ரத்கம ஆகிய பிரதேசங்களில் கடும் குடிநீர் தட்டுப்பாட்டுப் பிரச்சினையொன்று காணப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பிரச்சினைக்குத் தீர்வாகிய மாகாலி நீர் வழங்கல் திட்டத்தின் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், ஒதுக்கப்படும் அப்பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பிரதேசங்களில் காணப்படுகின்ற குடிநீர் பிரச்சினைக்கு தீர்வினைப் பெற்றுத்தரும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

558/2020

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கலேவெல பிரதேச செயலகப் பிரிவுக்கு உரித்தான தேவஹுவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள, கல்பொக்க யாய எனும் கிராமத்தில், கலேவெவ-கலாவாவி வீதியில், புலன் வாவி கற்குழிக்கும் பிரதான வீதிக்கும் அருகாமையில் அமைந்துள்ள நிலப்பிரதேசம் வன ஒதுக்கமாக அமைந்துள்ளமையால் இது வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு உரித்தாகின்றது என்பதையும்;

(ii) ஒழுங்கமைக்கப்பட்ட குழுவொன்றினால் 2020.09.22 ஆம் திகதி அதிகாலையில் மேற்குறிப்பிட்ட நிலப்பரப்பில் நிரந்தர கட்டிடமொன்றும் சில தற்காலிக நிர்மாணப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிர்மாணப் பணிகளுக்கு பிரதேச செயலாளரது அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், பொறுப்புக் கூற வேண்டிய பிறிதொரு அரசாங்க உத்தியோகத்தர் அல்லது நிறுவனத்தின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இன்றேல், இந்த நிர்மாணப் பணிகளை அகற்றி, வன ஒதுக்கத்தைப் பாதுகாப்பதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

577/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை மகாவலி அதிகாரசபையினால் மகாவலி "எல்" வலயத்திற்கென முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் இருந்து கையகப்படுத்தப்பட்ட காணியின் அளவினை ஹெக்டயர்களில் மற்றும் சதவீதத்தில் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 1984 ஆம் ஆண்டு பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி கிராமங்களில் வாழ்ந்த தமிழ் மக்கள் யுத்தத்திற்கு பின்னர் மேற்படி கிராமங்களில் குடியேறச் சென்ற போது அக்கிராமங்களில் சிங்கள மக்கள் குடியேறியிருந்தார்கள் என்பதையும்;

(ii) தமிழ் பெயர்களைக் கொண்டு அழைக்கப்பட்ட கிராமங்கள் மற்றும் குளங்களுக்கு சிங்கள பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) அனுமதிப் பத்திரம் உள்ள தமிழ் மக்களது காணிகள், இலங்கை மகாவலி அதிகாரசபையினால் அரசியல்வாதிகளின் உறவினர்களுக்கும் செல்வந்தர் களுக்கும் நீண்ட கால குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளன என்பதையும்;

(iv) மேற்படி கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது காணிகளில் விவசாயம் செய்கின்ற போது, இலங்கை மகாவலி அதிகாரசபையினால் தடைகள் ஏற்படுத்தப்படுகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) முல்லைத்தீவு மாவட்டத்தின் மகாவலி "எல்" வலயத்தில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ள காணிகளைத் தவிர்ந்த எஞ்சிய காணிகள், கரைத்துறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்கு ஒப்படைக்கப்படுமா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

581/2020

கௌரவ வேலு குமார்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தெல்தெனிய பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள மாபேரிதன்ன அரச விலங்குப் பண்ணையானது, தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையினால் (NLDB) நிருவாகிக்கப்படுவதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பண்ணையில் பணிபுரியும் அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாவை என்பதையும்;

(ii) வசிக்கின்ற குடும்பங்களின் எண்ணிக்கை யாவை என்பதையும்;

(iii) அமைக்கப்பட்டுள்ள தொழிலாளர் குடியிருப்புகள் மற்றும் லயன்களின் எண்ணிக்கை யாவை என்பதையும்;

(iv) அமைக்கப்பட்டுள்ள மொத்த லயன் அறைகளின் எண்ணிக்கை யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்குறிப்பிட்ட பண்ணையில், லயன் அறைகளில் வசிக்கின்ற குடும்பங்களுக்கு தனி வீடுகளை நிர்மாணிப்பதற்காக கடந்த காலப்பகுதியில் காணிகள் வழங்கப்பட்டதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு வழங்கப்பட்டுள்ள காணித் துண்டுகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி பண்ணையில் வசிக்கின்ற ஆனால் லயன் அறைகளில் வசிக்காத குடும்பங்களுக்கு காணிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2021 ஏப்ரல் 09, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

69/2020

கௌரவ ஹேஷா விதானகே,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள கைத்தறி நெசவாலைகளினால் பெரும் எண்ணிக்கையிலான தொழில்வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டு தேசிய உற்பத்திக்கு நேரடியானதும் மறைமுகமானதுமான பங்களிப்பை வழங்குகிறது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள கைத்தறி நெசவாலைகளில் தற்போது தொழிற்படும் நிலையிலுள்ள பிரதான, உப கிளைகள் மற்றும் குடிசைசார் நெசவாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இன்றளவில் மூடப்பட்டுள்ள பிரதான, உப கிளைகள் மற்றும் குடிசைசார் நெசவாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி (அ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள நெசவாலைகள் மூடப்படுவதற்கு தாக்கம் செலுத்திய காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) அதன் மூலம் இழக்கப்பட்ட தொழில் வாய்ப்புக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) (i) கொலன்ன பிரதேச செயலாளர் பிரிவில் இயங்கி வருகின்ற கைத்தறி நெசவாலைகளின் வருடாந்த புரள்வு யாதென்பதையும்;

(ii) அந்த நிலையங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரத்தைக் கொண்டுள்ள நிறுவனம் யாதென்பதையும்;

அவர் மேலும் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

200/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுற்றுலாத்துறை அமைச்சு தற்போது இயங்கும் இடத்தின் முகவரி யாதென்பதையும்;

(ii) மேற்படி அமைச்சு இயங்கும் கட்டிடத்திற்காக மாதாந்தம் செலுத்தப்படும் வாடகை எவ்வளவென்பதையும்;

(iii) இவ்வமைச்சினை அரசாங்கத்திற்குச் சொந்தமான கட்டிடமொன்றிற்கு கொண்டு செல்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

317/2020

கௌரவ புத்திக பத்திறண,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் மெய்வல்லுனர் விளையாட்டுக்களை மேம்படுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி தொகையில் அரசாங்க பாடசாலைகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையில் பாடசாலைகளிலிருந்து வெளியேறியுள்ள பிள்ளைகளின் மெய்வல்லுனர் திறமைகளை வளர்ப்பதற்காக ஒதுக்கப்பட்ட தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மெய்வல்லுனர் விளையாட்டுக்களின் மூலம் சர்வதேச வெற்றிகளைப் பெற்றுக் கொள்வதற்காக பாடசாலை விளையாட்டு வீரர்களை வழிப்படுத்துவதற்கான திட்டங்களைத் தயார் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இலங்கை மெய்வல்லுனர் விளையாட்டுக்கள் சங்கம் மற்றும் அதனுடன் இணைந்த ஏனைய சங்கங்களின் நிருவாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அரசாங்கம் சம்பந்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகளில் சம்பந்தப்படுகின்ற முறை யாதென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

438/2020

கௌரவ சாந்த பண்டார,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையிலுள்ள இளைஞர், யுவதிகளின் ஆற்றல்களை மேம்படுத்துவது தொடர்பில் தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி பயிற்சி நிலையங்களை அமைக்கும் போது மாவட்ட அடிப்படையில் அல்லது பிரதேச செயலக அடிப்படையில் கவனத்திற் கொள்ளப்பட்டதா என்பதையும்;

(iii) மேற்படி பயிற்சி நிலையங்களில் இருந்து பயிற்சியினைப் பெற்று வருடாந்தம் வெளியேறும் இளைஞர், யுவதிகளின் எண்ணிக்கை அண்ணளவாக எத்தனையென்பதையும்;

(iv) வெற்றிகரமாக பயிற்சியினைப் பூர்த்தி செய்யும் இளைஞர், யுவதிகளை தொழில்வாய்ப்பில் ஈடுபடுத்தும் வேலைத்திட்டமொன்று காணப்படுகின்றதா என்பதையும்;

(v) இன்றேல், அவர்களது எதிர்காலத்தினை வெற்றிகரமானதாக்கும் முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

528/2020

கௌரவ ரோஹண பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள வடமத்திய மாகாண சபையின் கீழ் செயற்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) இப்பாடசாலைகளில் தற்சமயம் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பாடங்களுக்கு அமைவாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

560/2020

கௌரவ மயந்த திசாநாயக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தினால் இன்றளவில் பேணி வரப்படுகின்ற நெல் களஞ்சியசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவை அமைந்துள்ள பிரதேசங்கள் யாவையென்பதையும்;

(iii) தனியாரினால் பேணி வரப்படுகின்ற நெல் களஞ்சியசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அத்தகைய நெல் களஞ்சியசாலைகள் ஒவ்வொன்றிலும் இன்றளவில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள நெல்லின் அளவு தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(v) மேற்படி களஞ்சியசாலைகளுக்கு மேலதிகமாக புதிய களஞ்சியசாலை நிலையங்களை அமைக்க திட்டமிடப்பட்டிருக்கின்றதா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) விவசாயிகளுக்கு இன்றளவில் இலவசமாக உரம் வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், ஒரு விவசாயிக்கு எவ்வளவு உரம் வழங்கப்படுகிறது என்பதையும்;

(iii) அவ்வாறு இலவசமாக வழங்கப்படுகின்ற உர வகைகள் யாவை என்பதையும்;

(iv) அரசாங்கம் அதற்காக எவ்வளவு தொகையினைச் செலவிடுகின்றது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

590/2020

கௌரவ எஸ்.எம்.எம். முஸ்ஸாரப்,— சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அமைந்துள்ள பிரபல சுற்றுலா வலயமொன்றான அறுகம்பே கரையோரப் பிரதேசமானது உலகில் நீர்ச்சறுக்கல் விளையாட்டுக்கு பிரசித்திப் பெற்ற முதல் பத்து இடங்களில் ஒன்றென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அறுகம்பே பிரதேசம் இதுவரை சுற்றுலா வலயமொன்றாக பிரகடனம் செய்யப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பெரும் எண்ணிக்கையிலான சுற்றுலாப்பயணிகள் வருகை தருகின்ற இடமொன்றான அறுகம்பே பிரதேசத்தில் சுற்றுலாப்பயணிகளுக்குத் போதியளவு உட்கட்டமைப்பு வசதிகள் இல்லையென அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், சுற்றுலாப்பயணிகளுக்கு போதியளவில் உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுக்க மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

636/2020

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பெரும்பான்மையான தமிழ் பிரதிநிதிகள் பிரதிநிதித்துவம் செய்கின்ற பிரதேச சபைகளை நகர சபைகளாக தரமுயர்த்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

642/2020

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வட மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள கீழ் மல்வத்துஓயா நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதற்காக முன்னாள் பிரதமரினால் அடிக்கல் நடப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்தின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(ii) இக்கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவினம் எவ்வளவென்பதையும்;

(iii) நீர்ப்பாசன திணைக்களம், சீன நிறுவனம் ஆகிய நிறுவனங்கள் இரண்டில் இக்கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனம் யாதென்பதையும்;

(iv) சீன நிறுவனத்தினால் நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்படுமாயின், அதற்கான மதிப்பீட்டுச் செலவினம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

722/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாவட்ட மக்களுக்கு சுகாதார சேவைகளை வழங்கும் மன்னார் மாவட்ட வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவின் கட்டிடம் மிகவும் பழைமையானது எனவும்;

(ii) மேற்படி வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவினை நிர்மாணிப்பதாக கடந்த காலத்தில் வாக்குறுதியளிக்கப்பட்டபோதிலும், இதுவரையில் அதன் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) பெரும்பாலான மருத்துவ பரிசோதனைகள் இந்த வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதையும்;

(ii) சீ.டீ.ஸ்கென் (CT SCAN), நரம்பியல் (NEUROLOGY), தொண்டை, காது, மூக்கு (ENT), எலும்பியல் (ORTHOPAEDIC), புற்றுநோயியல் (ONCOLOGY), சிறுநீர்த்தொகுதி சார்ந்த நோயியில்(UROLOGY), சிறுநீரகவியல் (NEPHROLOGY), வாய், முக மற்றும் தாடை(OMF) ஆகிய துறைசார் பரிசோதனைகளை இந்த வைத்தியசாலையில் மேற்கொள்ள முடியாத ஒரு நிலை காணப்படுகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஈ) மேற்படி துறைசார் பரிசோதனைகளை மீண்டும் மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் ஆரம்பிக்க முடியுமா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

# 2021 ஏப்ரல் 20, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

36/2020

கௌரவ ஹேஷா விதானகே,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 முதல் 2019 வரையிலான ஆண்டுகளில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் அளவு ;

(ii) அதற்கமைய அவ்வவாண்டுகளில் அரிசி இறக்குமதிக்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை ;

ஒவ்வொரு வருடத்திலும் தனித்தனியாக எவ்வளவு என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட ஆண்டுகளில் அரிசி இறக்குமதியின்போது ஒரு கிலோ அரிசிக்காக அறிவிடப்பட்ட வரித்தொகை ;

(ii) மேற்குறிப்பிட்ட ஆண்டுகளில் அரிசி இறக்குமதிக்காக அறவீடு செய்த மொத்த வரித் தொகை ;

எவ்வளவு என்பதையும் தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்குறிப்பிட்ட ஆண்டுகளில் அரிசியின் விலைத் தளம்பல் எந்த வகையில் இடம்பெற்றதென்பதனை ஆண்டுகளின் அடிப்படையில் தனித்தனியாக முழுமையான அறிக்கையொன்றினை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

203/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் புதிய பணிப்பாளர்கள் சபை உறுப்பினர்களின் பெயர்கள், விலாசங்கள், கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்வாண்மைத் தகைமைகள் ஆகியன தனித்தனியாக யாவையென்பதையும்;

(ii) இளைஞர்களின் அபிவிருத்தி தொடர்பாக அமைச்சின் தொலைநோக்கு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

230/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மரக் கட்டைகளின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி மரக் கட்டைகள் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி மரக் கட்டைகள் இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு மரக் கட்டைகளை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

356/2020

கௌரவ புத்திக பத்திறண,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை நில்வளா கங்கையில் கழிவுகள் அகற்றப்படுவதன் காரணமாக இந்த கங்கை மாசடைந்துள்ளது என்பதையும்;

(ii) மாத்தறை மாவட்டத்திலுள்ள மக்களின் சுகாதார நிலைக்கு இது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதையும்;

(iii) நீரின் தரத்தை பாதுகாத்துக்கொள்வதற்கு நில்வளா கங்கையின் இருமருங்கும் ஒதுக்கிடமாக பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்பதையும்;

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) நில்வளா கங்கையின் இருமருங்கிலும் 33 அடிகளிலான ஒதுக்கிடமொன்றைத் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாவென்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2016 ஆம் ஆண்டில் நில்வளா கங்கையில் கழிவுகளை கொட்டியதன் காரணமாக ஆட்கள் கைது செய்யப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

539/2020

கௌரவ ரோஹன பண்டார,— வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரிடம் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காட்டு யானைகளின் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்துள்ள அனுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள கிராமங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை யானை - மனித மோதல் காரணமாக மரணமடைந்த ஆட்களின் எண்ணிக்கை மற்றும் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அனுராதபுரம் மாவட்டத்தில் நிலவுகின்ற மனிதர்களுக்கும் யானைகளுக்கும் இடையிலான மோதலுக்கு நிரந்தரமான தீர்வொன்றை வழங்குவதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

603/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அநுராதபுரம் மாவட்டத்தின் மத்திய நுவரகம் பலாத்த பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 308 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள ஆசிரிகம வீதியில் காகொல்லேவ சந்தியிலிருந்து கட்டுக்கெலியாவ சந்தி வரை சுமார் 2 கி.மீ. தூரத்தைக் கொண்ட பகுதி மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது என்பதை அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதிப் பகுதியை புனரமைக்கத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

620/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மருத்துவப் பட்டங்களை வழங்கும் சில சர்வதேச பல்கலைக்கழகங்களை கறுப்புப் பட்டியலில் சேர்ப்பதற்கு இலங்கை மருத்துவச் சபை தீர்மானித்துள்ளதா;

(ii) ஆமெனில், மேற்படி பல்கலைக்கழகங்களின் பெயர்கள் யாவை;

(iii) அவ்வாறான தீர்மானமொன்றை மேற்கொள்வதற்கு ஏதுவான காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்குறிப்பிட்ட (அ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களிலிருந்து பட்டம் பெற்ற இலங்கை மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டுக்கமைய வெவ்வேறாக எத்தனை;

(ii) மேற்படி பல்கலைக்கழகங்கள் தொடர்பாக அமைச்சு மேற்கொள்ளவுள்ள அடுத்தகட்ட நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

717/2020

கௌரவ சாந்த பண்டார,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) விளையாட்டு வீரர்களை சேர்மத்தில் உள்ளடக்கி பயிற்சி வழங்குவதன் மூலம் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) அமைச்சின் அனுசரணையின் கீழ் தற்போது பேணிச் செல்லப்படும் விளையாட்டுச் சேர்மங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) எந்தெந்த விளையாட்டுகளுக்காக மேற்படி சேர்மங்கள் பேணப்பட்டு வருகின்றன என்பதையும்;

(iii) தடகள விளையாட்டுக்கான தேசிய சேர்மம் பேணப்பட்டு வரும் இடம் யாதென்பதையும்;

(iv) மேற்படி சேர்மத்தில் தற்போது பயிற்சி பெற்றுவரும் விளையாட்டு வீர வீராங்கனைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) அந்த விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு போதுமானளவு வசதிகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) இன்றேல், ஏன் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

753/2020

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பிலிருந்து பொலன்னறுவை வரை போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள புகையிரதம், மட்டக்களப்பு வரை ஈடுபடுத்தப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள புகையிரதப் பாதைகள் புனரமைக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

763/2020

கௌரவ அமரகீர்த்தி அதுகோரள,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பொலனறுவை மாவட்டத்திற்குரிய —

(i) கல்விக் கோட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(ii) தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(iii) மாகாணப் பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(iv) மேற்படி பாடசாலைகளில் தற்போது காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறை எவ்வளவு;

(v) கடந்த 5 ஆண்டுகளில் மூடப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) பொலனறுவை மாவட்டத்திற்குரிய பாடசாலைகளில் —

(i) க.பொ.த (உ/தர) வகுப்புகளுக்கு ஏற்புடையதாக அமைகின்ற நான்கு பாடத் துறைகள், மூன்று பாடத் துறைகள், இரண்டு பாடத் துறைகள், ஒரு பாடத்துறை மாத்திரம்;

(ii) க.பொ.த (சா/தர) பரீட்சை வரை;

(iii) ஐந்தாம் தரம் வரை;

கற்பிக்கப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை கல்விக் கோட்டங்களுக்கு அமைவாக தனித்தனியாக யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) பொலன்னறுவை மாவட்டத்திற்குரிய பாடசாலைகளில் கடமையில் ஈடுபட்டுள்ள மொத்த ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், கல்வியியற் கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் ஏனைய ஆசிரியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா. 72/2021

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னிஆரச்சி

கௌரவ (திருமதி) தலதா அதுகோரல

கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய

கௌரவ (திருமதி) டயனா கமகே,— இலங்கையில் பாலின அடிப்படையிலான பாகுபாடுகள் மற்றும் பெண்களின் உரிமைகள் மீறல்கள் குறித்து சிறப்பு கவனம் செலுத்துவதன் மூலம் பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தை உறுதி செய்தல் பற்றி ஆராய்ந்து அதன் விதப்புரைகளை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கான பாராளுமன்ற விசேட குழு,— சட்டத்தின் முன்பு ஆட்கள் எல்லோரும் சமமானவர்கள், அத்துடன் அவர்கள் சட்டத்தினால் சமமாக பாதுகாக்கப்படுவதற்கு உரித்துடையவர்கள் என இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தின் 12 ஆம் உறுப்புரை அங்கீகரிப்பதனாலும்;

பெண்களின் உரிமைகளின் முன்னேற்றத்திற்காக சட்டவாக்க அல்லது ஆட்சித்துறையின் உறுதிப்பாட்டு நடவடிக்கைக்கு 12(4) ஆம் உறுப்புரை ஏற்பாடு செய்வதனாலும்;

மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடனம் (UDHR ); குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டொழுங்கு (ICCPR ); பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டொழுங்கு (ICESCR ); மற்றும் பெண்களுக்கு எதிரான அனைத்து வடிவங்களிலுமான பாரபட்சத்தை ஒழிப்பதற்கான சமவாயம் (CEDAW ) ஆகிய ஏனையவற்றுடன் பால்நிலை சமத்துவத்தை மேம்படுத்தும் பல்வேறு சர்வதேச சட்ட ஆவணங்களை இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் ஒப்புறுதிப்படுத்தியுள்ளமையாலும்;

இலங்கை கையொப்பதாராக உள்ள, ஐக்கிய நாடுகளினால் வகுத்தமைக்கப்பட்ட நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளின் சூழமைவில், பால்நிலை சமத்துவத்தை உறுதிப்படுத்தல் மற்றும் அனைத்துப் பெண்களையும் சிறுமிகளையும் வலுவூட்டல் ஆகியவை பிரதானமாக காணப்படுவதனாலும்;

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே தலைமையிலான பாராளுமன்றத்தின் பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம், அவர்களின் பிரதிநிதித்துவம், சட்டவாக்கம், வரவுசெலவுத் திட்டமிடல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகள் ஆகியவற்றின் ஊடாக பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்துவம் என்பனவற்றை ஆதரித்து வாதாடுவதற்கும் பிரதான போக்காக ஏற்படுத்துவதற்குமான பொறிமுறை ஒன்றை அமைப்பதற்கான அவசியம் பற்றி தீர்மானித்துள்ளதாலும்; மற்றும்

பால்நிலை சமத்துவம் மேம்படுத்தப்படுவதையும் மதிக்கப்படுவதையும் மற்றும் இலங்கையில் அனைத்து பெண்களும் சிறுமிகளும் வலுவூட்டப்படுவதையும் உறுதிப்படுத்தி பால்நிலை அடிப்படையிலான பாரபட்சத்தை எதிர்கொள்ளும் பொருட்டு பின்வருவன தொடர்பில் ஆராய்ந்து விதப்புரைகளை மேற்கொள்வதற்காக பாராளுமன்ற விசேட குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது , —

(அ) தொழில் வாய்ப்பு, பதவி உயர்வு வாய்ப்புகள் மற்றும் வேலைத்தலத்தில் துன்புறுத்தல்கள் உள்ளடங்கலான அனைத்து விதமான பால்நிலை அடிப்படையிலான பாரபட்சங்கள் பற்றிய பெண்களின் குறைகளை கேட்டல்;

(ஆ) அனைத்து துறைகளிலும் மற்றும் அனைத்து மட்டங்களிலும் போதிய அளவிலான உள்ளூர் வளங்களின் ஒதுக்கீடு மற்றும் இலங்கையில் பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தை மேம்படுத்துவதற்கான அணுகல் ஆகியவற்றை பரிசீலித்தல் மற்றும் ஆதரித்து வாதாடுதல்;

(இ) பால்நிலையைப் பிரதான போக்காக ஏற்படுத்துவதை உறுதிப்படுத்தி பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளின் வாழ்வில் பாரபட்சம் மற்றும் எதிர்மறை தாக்கத்தை தடுப்பதற்காக அனைத்து தொடர்புடைய சட்டங்களையும் நுண்ணாய்வு செய்தல் மற்றும் மீளாய்வு செய்தல்;

(ஈ) பால்நிலை தொடர்பான பதில் நடவடிக்கைத் திட்டமிடல் மற்றும் வரவுசெலவுத் திட்டமிடல் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்காக உரிய நிரல் அமைச்சுகள் மற்றும் அதிகாரிகளுடன் ஆதரவு நாடுதல்;

(உ) விழிப்புணர்வு பிரச்சாரங்களை மேற்கொள்வது மற்றும் ஆண்கள் மற்றும் பெண்கள் மத்தியில் சமத்துவத்தை அடைவது தொடர்பான விடயங்களில் தகவல் பரவலை ஊக்குவித்தல்

(ஊ) தேசிய, மாகாண மற்றும் உள்ளூர் மட்டங்களிலும் பொது, சிவில் சமூகத்திலும் மற்றும் தனியார் துறைகளிலும் தீர்மானம் மேற்கொள்ளும் அமைப்புகளில் அதிக பெண்கள் பிரதிநிதித்துவத்திற்காக ஆதரவு நாடுதல் மற்றும் ஆதரித்து வாதாடுதல்;

(எ) தேசிய, மாகாண மற்றும் உள்ளூர் மட்டங்களில் பால்நிலை சமத்துவ கோட்பாடுகளின் ஒருங்கிணைப்பிற்கான நடவடிக்கைகளை மீளாய்வு செய்தல்;

(ஏ) இலங்கையில் பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தை மேம்படுத்துவதற்காக அரச - தனியார் பங்காண்மைகளை ஊக்குவித்தல்;

(ஐ) பிராந்திய மற்றும் சர்வதேச மட்டங்களில் நாடுகளிடையில் நிபுணத்துவம் மற்றும் அனுபவங்களை பகிர்தல் மற்றும் ஏனைய பாராளுமன்றங்களில் இருந்து கற்ற பாடங்களை மீளாய்வு செய்தல்; மற்றும்;

(ஒ) மேலுள்ள விடயங்களுடன் தொடர்புடைய அல்லது இடைநேர்விளைவான அனைத்து விடயங்களையும் பரிசீலித்தல்.

2. (அ) குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

(ஆ) பாராளுமன்ற நிலையியற் கட்டளை 101 இன் ஏற்பாடுகளால் தடைபெறாமல், பாராளுமன்றத்தின் பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியத்தின் அனைத்து உறுப்பினர்கள் மற்றும் அனைத்து அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய ஆண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்ட இருபத்தைந்திற்கு (25) மேற்படாத உறுப்பினர்களைக் குழு கொண்டிருத்தல் வேண்டும்.

3. குழுவானது —

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) மேலே சொல்லப்பட்ட விடயங்களை முழுமையாக பரிசீலனை செய்வதற்கு அவசியமென குழு கருதுகின்றவாறாக எவரேனும் ஆளை அதன் முன் தோன்றுமாறு அழைப்பதற்கும், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவை அதன் முன் கொண்டுவருமாறு எவரேனும் ஆளை வேண்டுவதற்கும் அத்தகைய எழுத்திலான அல்லது வாய் மூலமான எல்லாச் சான்றுகளையும் பெறுவதற்கும்;

(இ) குழுவுக்கு உதவி வழங்குவதற்காக தொடர்புடைய துறைகளில் விசேடத்துவம் பெற்றவர்கள் மற்றும் நிபுணத்துவம் பெற்றவர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

(ஈ) பாராளுமன்றத்தின் ஏதும் ஒத்திவைப்பினால் தடைபெறாது காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் கூடுவதற்கும்

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழுவானது அதன் முதல் கூட்டத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள் அல்லது பாராளுமன்றத்தால் வழங்கப்படக்கூடிய அத்தகைய வேறு அல்லது மேலதிக காலப்பகுதிக்குள் அதன் அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

5. அக்குழுவின் அறிக்கையொன்று, பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டவுடன் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் அவர்கள் தம் அவதானிப்புகளையும் அது தொடர்பாக எடுத்த நடவடிக்கைகளையும் எட்டு (08) வார காலப்பகுதியினுள் சபைக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.